


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 04 | Issue: 022 | 4 Pages | 22.08.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 022 | 4 பக்கங்கள் | 22.08.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

**விளக்கம்: ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.**

# ஆப்பிரிக்கா: தங்கச் சுரங்கம் சரிந்த விபத்தில் பலி எண்ணிக்கை 107 ஆக உயர்வு



பாங்குயி, ஆக. 22

மத்திய ஆப்பிரிக்காவில் தங்கச்சுரங்கம் சரிந்து விழுந்து மண்ணில் புதைந்து பலியானவர்களின் எண்ணிக்கை 107 ஆக உயர்ந்துள்ளது. ஆபத்தான சூழலில் ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள ஏழை நாடுகளில் வசிக்கும் லட்சக்கணக்கான கிராமப்புற மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவது பாரம்பரிய தங்கச்சுரங்கத் தொழிலாகும். எவ்வித நவீனப் பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி, உயிரைப் பணையம் வைத்து மண்ணைத் தோண்டி தங்கம் எடுக்கும் ஆபத்தான வேலைகளில் இங்குள்ள தொழிலாளர்கள் தினசரி ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய ஆபத்தான சூழலில், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசின் கேமரூன் எல்லைக்கு அருகே உள்ள ஜாம்போய் என்ற கிராமத்தின் அபா பகுதியில் உள்ள ஒரு பெரிய தங்கச்சுரங்கத்தில் நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். பல அடி ஆழத்தில் சிக்கினர் அப்போது, திடீரென சுரங்கத்தின் மேல் பகுதி பயங்கர சத்தத்துடன் சரிந்து விழுந்தது. சுரங்கத்தின் உள்ளே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் அனைவரும் மண்ணுக்குள் உயிருடன் புதைந்தனர். விபத்து நடந்த உடனே அங்குச் சென்ற மீட்புக்குழுவினர் உள்ளூர் மக்களின் உதவியுடன் மண்ணைத் தோண்டி உடல்களை மீட்கும் பணியில் தீவிரமாக இறங்கினர். முதற்கட்டமாக 30 பேர் மட்டுமே பலியானதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. ஆனால், இடிபாடுகள் அதிகமாக இருந்ததால் பல அடி ஆழத்தில் சிக்கியவர்களை மீட்பதில் பெரும் சிக்கல் நீடித்தது. இந்நிலையில் மண்ணுக்குள் இருந்து மேலும் பல உடல்கள் மீட்கப்பட்டதை அடுத்து, இந்த விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 107ஐ கடந்துள்ளதாக உள்ளூர் சுரங்க சங்கத்தின் மூத்த அதிகாரி அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளார். படுகாயமடைந்த தொழிலாளர்களுக்குத் தங்கள் நாட்டு மருத்துவமனைகளில் அவசரச்சிகிச்சை அளிக்கத் தயாராக இருப்பதாக பக்கத்து நாடான கேமரூன் அரசு அறிவித்துள்ளது. விபத்து நடந்த இடத்தில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்தச் சுரங்கத்தை சட்டவிரோதமாக நடத்தியது யார் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 14 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: கதகளி பயிற்சியாளர் மீது போக்சோ வழக்கு



பாலக்காடு, ஆக. 22

கேரளத்தில் கதகளி என்ற பாரம்பரிய நடனம் கலையாக உள்ளது. இதனை பள்ளி, கல்லூரி மாணவர்கள் பலரும் ஆர்வமாக கற்று வருகின்றனர். இந்த நிலையில் பாலக்காடு கல்லேக்குளங்கரா கிராமத்தில் வெங்கிட்டராமன் (வயது 56) என்பவர் கதகளிபயிற்சிஅளித்துவருகிறார். இவர்தன்னிடத்தில் கதகளி பயிற்சி பெற வந்த 14 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிகிறது. இதற்கிடையே பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது கதகளி பயிற்சியின் போது தனக்கு நடந்தது குறித்து ஆலோசகரிடம் சிறுமி கூறினாள். இதுகுறித்து பள்ளி நிர்வாகத்தினர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீ சார் விசாரணை நடத்தினர். இதில் சிறுமிக்கு வெங்கிட்டராமன் பாலியல் தொல்லை கொடுத்தது தெரியவந்தது. இதுதொடர்பாக அவர் மீது போக்சோ சட்டத்தில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். தலைமறைவான வெங்கிட்டராமனை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கொச்சி மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பெயரை மாற்ற அரசுக்கு பரிந்துரை

திருவனந்தபுரம், ஆக. 22

கொச்சி மெட்ரோ ரெயில் லிமிடெட் நிறுவனத்தின் பெயரை 'கேரளம் மெட்ரோ ரெயில் லிமிடெட்' என மாற்றக் கோரி கேரள அரசுக்கு அதன் மேலாண் இயக்குநர் லோநாத் பெஹரா பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளார். பெயர் மாற்றத்திற்கான காரணங்கள்கொச்சி மெட்ரோ நிறுவனம் தற்போது கொச்சி நகரைத் தாண்டி திருவனந்தபுரம் மற்றும் கோழிக்கோடு ஆகிய நகரங்களிலும் மெட்ரோ திட்டங்களைச் செயல்படுத்த ஆயத்தமாகி வருகிறது. மேலும், கொச்சி வாட்டர் மெட்ரோ மற்றும் மின்சார வாகனப் போக்குவரத்து போன்றதிட்டங்களையும் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. எனவே, ஒரு குறிப்பிட்ட நகரத்தின் பெயரை மட்டும் கொண்டிருக்காமல், மாநிலம் தழுவிய ஒட்டுமொத்தப் போக்குவரத்துப் பணியைக் குறிக்கும் வகையில் இந்தப் பெயர் மாற்றம் அவசியம் என்று பரிந்துரையில் கூறப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற பிற மாநிலங்களில் உள்ள மெட்ரோ நிறுவனங்கள், அந்தந்த மாநிலங்களின் பெயர்களில் மாற்றப்பட்ட முன்மாதிரியைப் பின்பற்றியே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்ட நடைமுறைகள்இந்தப் பெயர் மாற்றத்தால் நிறுவனத்தின் சொத்துகள், ஒப்பந்தங்கள் அல்லது ஊழியர்களின்சட்டப்பூர்வ அந்தஸ்தில் எந்த மாற்றமும் ஏற்படாது. இதற்கான பிராண்டிங் செலவுகள் அனைத்தையும் நிறுவனமே ஏற்கும். கேரள மாநில அரசு இதற்கு ஒப்புதல் அளித்த பிறகு, நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, பங்குதாரர்கள் மற்றும் மத்திய கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் இறுதி அனுமதியுடன் இந்தப் பெயர் மாற்றம் அமலுக்கு வரும். எதிர்ப்பு கிளம்பியதுஇதற்கிடையில், இந்த மாற்றத்திற்கு எர்ணாகுளம் எம்பி ஹைபி ஈடன் மற்றும் சில எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கொச்சிமெட்ரோவின்தற்போதையபிராண்ட்அடையாளத்தைப்பாதிக்காமல் பிற நகரங்களில் சேவைகளை விரிவுபடுத்த முடியும் என்பதால், பெயர் மாற்றத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என அவர்கள் முதல்மந்திரிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

# கட்டுமான பொருட்கள் கொண்டுசெல்ல கட்டுப்பாடு: கேரளாவுக்கு விலக்கு அளிப்பது குறித்து முதல்அமைச்சர் விஜய் பரிசீலனை

திருவனந்தபுரம், ஆக. 22

மற்ற மாநிலங்களுக்கு கட்டுமானப் பொருட்கள் (கற்கள்/ஜல்லி உள்ளிட்டவை)கொண்டுசெல்வதில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு களிலிருந்து கேரளாவுக்கு விலக்கு அளிப்பது குறித்து தங்கள் அரசு பரிசீலிக்கும் என்று கேரள முதல் மந்திரி வி.டி.சதீசனிடம், தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய் உறுதியளித்ததாக கேரள முதல் மந்திரியின் அலுவலகம் இன்று (வெள்ளிக்கிழமை) தெரிவித்தது.

மாமல்லபுரத்தில் நடைபெற்ற தெற்கு மண்டலக் குழு கூட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற சந்திப்பின்போது சதீசன் இந்த விவகாரத்தை எழுப்பியதாக அந்த அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் சிறப்பு சூழலைக் கருத்தில் கொண்டு இந்த கட்டுப்பாடுகள் குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு சதீசன் கோரிக்கை விடுத்தார் என்றும், இது தொடர்பாக மேலும் விவாதித்து விரைவில் தகுந்த முடிவை எடுக்க இரு முதல் அமைச்சர்களும் ஒப்புக்கொண்டதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

முன்னதாக, இக்கட்டுப்பாடுகளிலிருந்து கேரளாவுக்கு விலக்கு கோரி சதீசன், விஜய்க்கு எழுதி இருந்த கடிதத்தில் கூறியிருந்ததாவது:



தமிழகத்தில் இருந்து ஜல்லிக் கற்கள் உட்பட கட்டுமானப் பொருட்களை வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட தகவலை அறிந்தேன். இந்த நடவடிக்கையால் திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இருந்து கேரளாவுக்கு கட்டுமானக் கற்கள் வருவது பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் நடைபெறும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள், தமிழகத்தில் இருந்து கொண்டு வரப்படும் கற்களை நம்பியே இருக்கின்றன. எனவே, தற்போதைய தடையால் கேரளாவில் நடைபெற்று வரும் பல தேசிய நெடுஞ்சாலைத்திட்டங்களின்கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டு, அவை தாமதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் கேரளாவுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த தென் மண்டலத்தின் பொருளாதார வளர்ச்சி, பிராந்திய இணைப்பு, சரக்கு போக்குவரத்து மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக்கும் முக்கியமானவை. கேரளா பாராட்டுகிறது

குறிப்பாக, விழிஞ்சம் சர்வதேச துறைமுகத்தையும், வல்லார்பாடம் சர்வதேச கண்டெய்னர் முனையத்தையும் இணைக்கும் தடையற்ற போக்குவரத்தின்மூலம் தென்னிந்தியாவின் பொருளாதார வளர்ச்சியும் போட்டித்தன்மையும் அதிகரிக்கும். இயற்கை வளங்களை நிலையாகப் பாதுகாக்கும் தமிழக அரசின் கொள்கை நோக்கங்களை கேரளா பாராட்டுகிறது. அதேநேரம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உள்கட்டமைப்புத் திட்டங்களின் நியாயமான தேவையைக் கருத்தில் கொண்டு ஒருசமநிலையான அணுகுமுறையை உருவாக்கினால், உங்கள் கொள்கையிலும் பாதிப்பும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம். எனவே, கேரளாவில் நடைபெறும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் முக்கிய உள்கட்டமைப்புப் பணிகளுக்கு பிரத்யேகமாகத் தேவைப்படும் ஜல்லிக் கற்களை மட்டும் தடையின்றி கொண்டு செல்ல வசதியாக, உரிய தளர்வு அல்லது சிறப்பு நடைமுறையை ஏற்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# கொசுக்களால் பரவும் நோய்கள் குறித்து கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் பொது சுகாதார ஆலோசனையை வெளியிட்டுள்ளது

care HEALTH INSURANCE

சென்னை ஆக. 22

பருவமழையின் காரணமாக டெங்கு, மலேரியா மற்றும் சிக்குன்குனியா போன்ற கொசுக்களால் பரவும் நோய்களின் அபாயம் அதிகரித்து வருவதால், கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம், குடிமக்கள் விழிப்புடன் இருக்கவும், தடுப்பு நடவடிக்கைகளைமேற்கொள்ளவும், உரியநேரத்தில்மருத்துவ உதவியை நாடவும் வலியுறுத்தி ஒரு பொது சுகாதார ஆலோசனையை வெளியிட்டுள்ளது. இந்த நோய்களைப் பெரும்பாலும்தடுக்கமுடியும்என்றாலும், அவைபருவமழைக் காலத்தில் மீண்டும் மீண்டும் பொது சுகாதார சவாலாக உருவெடுத்து, பெரும்பாலும் கடுமையான நோய்களுக்கும் திட்டமிடப்படாத மருத்துவச் செலவுகளுக்கும் வழிவகுக்கின்றன. இந்தியா உச்சக்கட்ட பருவமழைக் காலத்திற்குள் நுழையும்நிலையில், பருவகாலநோய்ப்பரவலின்தாக்கத்தைக் குறைப்பதற்காக பொது சுகாதார அதிகாரிகள் ஆயத்த நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.




திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக் கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி, மாற்றுத்திறனாளி களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

# அரசு பள்ளி மாணவர்களுக்குபோதை ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்



திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் போதை விழிப்புணர்வு மன்றத்தின் சார்பாக போதை பொருட்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமையாசிரியர்திரு.ஜெபஜாண்சன் சாந்தகுமார் அவர்கள் தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக நடுக்கல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி முதுகலை ஆசிரியர் திரு பொன்னுசாமி அவர்கள் கலந்துகொண்டு மாணவருக்கு போதை விழிப்புணர்வு சார்ந்த கருத்துக்களையும், போதைப் பொருட்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய கருத்துக்களை வழங்கினார் முதுகலை ஆசிரியர் திரு விஜயராஜன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார் இந்த கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை போதை விழிப்புணர்வு மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் சரவண முத்துக்குமார் செய்திருந்தார் நிகழ்ச்சியில் உதவி தலைமை ஆசிரியை திருமதி காந்திமதி முதுகலை ஆசிரியர்கள் திரு ஆறுமுக நயினார், சுடலை வடிவு மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்

# மின்சார கட்டண உயர்வை கண்டித்து இந்திய தேசிய லீக் கட்சியினர் போராட்டம்




சென்னை, ஆக.22

மின்சார கட்டண உயர்வை கண்டித்து இந்திய தேசிய லீக் கட்சி சார்பில் திருவொற்றியூர் மாநகராட்சி அலுவலகம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநில செயலாளர் ஃபை ரோஸ் பாபா, திருவள்ளூர் மாவட்ட தலைவர் பாட்ஷா தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், திருவள்ளூர் மாவட்ட பொருளாளர் துறாபுதீன், செங்கல்பட்டுமாவட்டசெயலாளர் சுல்தான், வடசென்னை மாவட்ட தலைவர் ஜவுருதீன், திமுக வட்டச் செயலாளர் கார்த்திகேயன் மற்றும் பகுதி நிர்வாகிகள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். 200 யூனிட் இலவச மின்சாரம் என அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது பொதுமக்களுக்கு ரூ.4,000 முதல் ரூ.5,000 வரை மின்சார கட்டணம் வருவதாககட்சியினர்குற்றம்சாட்டினர். உயர்த்தப்பட்ட மின்சார கட்டணத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினர்.

# அரசுப் பேருந்தில் மாணவர்கள் சேட்டை: பொதுமக்கள் அதிர்ச்சி

கிருஷ்ணகிரி, ஆக. 22

ஓசூர் அருகே அரசுப் பேருந்தில் பள்ளி மாணவர்கள் படிக்கட்டுகளில் தொங்கியபடி ஆபத்தான முறையில் பயணம் செய்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. படிக்கட்டில் தொங்கியபடி சாகசம்கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அடுத்த அஞ்செட்டி தாலுகா பகுதிக்கு உட்பட்ட கிராமப்புறங்களில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கான பள்ளி மாணவ, மாணவிகள் அரசுப் பேருந்துகள் மூலம் பள்ளிக்குச் சென்று வருகின்றனர். இந்த நிலையில், இன்று (வெள்ளிக்கிழமை) காலை வழக்கம்போல் இயக்கப்பட்ட அரசுப் பேருந்து ஒன்றில், பள்ளி மாணவர்கள் சிலர் பேருந்தின் படியில் தொங்கியபடியும், ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டும் ஆபத்தான முறையில் பயணம் செய்தனர். ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு பேருந்தின் வெளிப்பகுதியில் சாகசம் செய்வது போல மாணவர்கள் நடந்து கொண்ட இந்த வீடியோ, பின்னால் வந்த வாகன ஓட்டிகளால் பதிவு செய்யப்பட்டு சமூக வலைதளங்களில் பகிரப்பட்டது.பெற்றோர்கள் பொதுமக்கள் அதிர்ச்சிசிறு விபத்து ஏற்பட்டாலும் மாணவர்களின் உயிருக்கே ஆபத்தாக முடியக்கூடிய இந்த செயலைக் கண்டு சக பயணிகளும் பொதுமக்களும் அதிர்ச்சியடைந்தனர். மாணவர்களின்இந்தபொறுப்பற்ற செயலுக்கு பெற்றோர்களும் சமூக ஆர்வலர்களும்



தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். கூடுதல் பேருந்துகள் இயக்க கோரிக்கைகிராமப்புறப் பகுதிகளில் பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களில் போதிய எண்ணிக்கையில் அரசுப் பேருந்துகள் இயக்கப்படாததே இது போன்ற கூட்ட நெரிசலுக்கும் ஆபத்தான பயணங்களுக்கும் முக்கியக் காரணம் எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். எனவே, மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கூடுதல் பேருந்து வசதிகளைஏற்படுத்தித்தரவேண்டும்என்றும், ஆபத்தான முறையில் பயணிக்கும் மாணவர்கள் மீது போக்குவரத்து போலீசாரும் பள்ளி நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

# வங்கக்கடலில் மாயமான 7 ஆந்திர மீனவர்கள்... தேடுதல் பணியை தீவிரப்படுத்த வேண்டும்: அன்புமணி



சென்னை, ஆக. 22

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:ஆந்திரப் பிரதேசம் அம்பேத்கர் கோணசீமா மாவட்டம் ஒடலரேவு கடற்கரையிலிருந்து கடந்த ஆகஸ்ட் 3ஆம் தேதி வங்கக்கடலுக்கு சூறை மீன்பிடிப்புக்காக சென்ற 7 மீனவர்கள் காணாமல் போய், 14 நாள்களாகும் நிலையில், இதுவரை அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்களைத் தேடும் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டிய நிலையில், தேடும் பணிகள்கைவிடப்படவுள்ளதாகவெளியாகும்செய்திகள் கவலையளிக்கின்றன.மீனவர்கள் மாயம்ஒடலரேவு பகுதியைச் சேர்ந்த 7 மீனவர்கள் கடந்த ஆகஸ்ட் 3ஆம் தேதி ஓடலரேவு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சூறை மீன்பிடிக்கச் சென்றனர். கர்ரி ராமுடு, கே ராமகிருஷ்ணா, எஸ் தாத்தாராவ், ஏசுதாசு, பலேபு சாந்தராவ், கொல்லட்டி ஸ்ரீனிவாஸ், சதீஷ் ஆகிய 7 மீனவர்களும் கடந்த 10 அல்லது 11ஆம் தேதி துறைமுகம் திரும்பியிருக்க வேண்டும். ஆனால், கடைசியாக கடந்த 7ஆம் தேதி குடும்பத்தினரைத் தொடர்பு கொண்ட அவர்களை அதன்பின்தொடர்புகொள்ளமுடியவில்லை.அவர்களின் படகு ஒதிஷா அல்லது மேற்கு வங்காள கடல்பகுதிக்கு காற்றில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.காணாமல் போன மீனவர்களை மீட்கும் பணியில் கடற்படைக்கு சொந்தமான இரு கப்பல்கள், கடலோரக் காவல் படைக்கு சொந்தமான 5 கப்பல்கள், விமானப் படைக்கு சொந்தமான இரு ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.அவர்கள்காணாமல்போனதாக கருதப்படும் பகுதியில் இருந்து 300 கடல் மைல் சுற்றளவில் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காக்கிநாடா, விசாகப்பட்டினம், ஒதிஷா மாநிலம் பாரதீப் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் உதவியும் கோரப்பட்டிருக்கிறது. ஒதிஷா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின்அதிகாரிகளுக்கும்இது குறித்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டு உதவிகள் கோரப்பட்டுள்ளன. கடற்படை, விமானப்படை ஆகியவை இணைந்து மேற்கொள்ளும் தேடுதல் வேட்டையை குறை சொல்ல முடியாது. ஆனால், இரு வாரங்களாகியும் அவர்களை கண்டுபிடிக்க முடியாததால், இன்னும் ஓரிரு நாள்களில் தேடும் பணிகளை நிறுத்த அரசு முடிவு செய்திருப்பதாகக்கூறப்படுகிறது.இதனால்மீனவர்களின் குடும்பத்தினரும், உறவினர்களும் கவலை அடைந்துள்ளனர். கடலுக்கு சென்ற மீனவர்களிடம் 1000 லிட்டர் டீசலும், 20 நாள்களுக்குத் தேவையான உணவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. கடுமையான காற்று காரணமாக அவர்கள் வெகு தொலைவுக்கு அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.மீனவர்கள் குடும்பத்தினருக்கு வாழ்வாதாரம்அதனால், தேடுதல் தொலைவை சற்று அதிகரித்து பணிகளை தீவிரப்படுத்தினால், காணாமல் போன மீனவர்களை கண்டுபிடித்து விடலாம். காணாமல் போன மீனவர்களில் மூவருக்குக் நீச்சல் கூட தெரியாது என்று கூறப்படுகிறது. இத்தகைய சூழலில் தேடும் பணிகள் கைவிடப்பட்டால், இதுநாள் வரை மேற்கொள்ளப் பட்ட முயற்சிகள் வீணாகி விடும். எனவே, காணாமல் போன மீனவர்களை கண்டுபிடிக்கும் வரை தேடுதல் பணிகளை நீட்டிக்க வேண்டும் என்று ஆந்திர அரசையும், கடற்படை மற்றும் கடலோரக் காவல்படைகளை கேட்டுக் கொள்கிறேன். காணால் போன மீனவர்கள் குடும்பத்தினருக்கு வாழ்வாதாரம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு தேவையான உணவு, நிதி ஆகியவற்றை அரசு வழங்க வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# திருப்பூர் அருகே குடியிருப்பில் குளம்போல் தேங்கிய கழிவுநீர் அகற்றம்

திருப்பூர், ஆக. 22

திருப்பூர்அருகேகரைப்புதூர்ஊராட்சிஅய்யம்பாளையம் கிழக்கு பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் அங்கேயே குளம்போல் தேங்கி நின்றது. உரிய திட்டமிடல் இல்லாமல் கால்வாய் கட்டப்பட்டதால் பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர்.இது குறித்து 'தினத்தந்தி' யில் செய்தி பிரசுரிக்கப்பட்டது. இதன் எதிரொலியாக, கரைப்புதூர் ஊராட்சி நிர்வாகம் சார்பில் குளம் போல் தேங்கியிருந்த கழிவுநீர் அகற்றப்பட்டது. இதையடுத்து மக்கள் பிரச்சினைகளை செய்தியாக வெளியிட்ட 'தினத்தந்தி'க்கும், நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும் அப்பகுதி பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.



# உமர் பிரியாணி புதிய கடை திறப்பு - தொடக்கச் சலுகையில் அசத்தல்

சென்னை, ஆக. 22

பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப சுவையான பிரியாணியை வழங்கும் வகையில் "உமர் பிரியாணி" என்ற புதிய பிரியாணி கடை திறப்பு விழா நடைபெற உள்ளது. கடை திறப்பை முன்னிட்டு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு தொடக்கச் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தொடக்கச் சலுகையாக சிக்கன் பிரியாணி ரூ.49க்கும், மட்டன் பிரியாணி ரூ.99க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இந்த சிறப்பு சலுகை மதியம் 12 மணி முதல் 2 மணி வரை மட்டுமே வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு




அதிகமானோர் பயனடையும் வகையில், ஒரு நபருக்கு அதிகபட்சம் 2 பார்சல் பிரியாணி மட்டுமே வழங்கப்படும் என கடை நிர்வாகம் தெரிவித்துள்ளது. தொடக்கச் சலுகையை முன்னிட்டு பொதுமக்கள் அதிகளவில் வருகை தரக்கூடும் என்பதால், அனைவரும் பொறுமையுடன் இருந்து, சரியான வரிசையில் நின்று கடை நிர்வாகத்திற்கு முழு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சுவையில் தனி ருசி... விலையில் சிறப்பு சலுகை... உமர் பிரியாணி!


# திருவண்ணாமலை: டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி பெண்கள் போராட்டம்

திருவண்ணாமலை, ஆக. 22

திருவண்ணாமலை மாவட்டம் அண்ணகிளிகொட்டம் சாலையில் செயல்பட்டு வரும் டாஸ்மாக் கடையை அகற்ற கோரி கடையை முற்றுகையிட்டு பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.கடையை அகற்ற போராட்டம்திருவண்ணாமலை மாவட்டம் அண்ணக்கிளிகொட்டம் சாலையில் புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமித்து டாஸ்மாக் கடையை நடத்தி வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். டாஸ்மாக் கடையை சுற்றி 500க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன.அந்தவழியேநடந்துசெல்லும்பொதுமக்களிடம் மதுப்பிரியர்கள் தகராறில் ஈடுபடுகின்றனர். இதனால் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மற்றும் பெண்கள் பெரும் அச்சத்தில் செல்ல வேண்டிய நிலை உள்ளது. வேலைக்கு சென்று இரவில் வீடு திரும்பும் பெண்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு டாஸ்மாக் கடையை அகற்ற கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.3 முறை மனு அளித்தும் எந்த வித



நடவடிக்கையும் எடுக்க வில்லை என்பதால் டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டு அப்பகுதி மக்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். டாஸ்மாக் கடையை உடனடியாக அகற்றவில்லை என்றால் கடையின் முன்பு "தீக்குளித்து உயிரிழப்போம்" என பெண்கள் எச்சரித்துள்ளனர். இந்த போராட்டம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




மாண்புமிகு செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் குமார். ரா அவர்கள் முன்னிலையில் 20.08.2026 அன்று சென்னையில், தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவுத் திறன் வளத்தை மேம்படுத்தும் நோக்கில் ICT அகாடமி, பன்னாட்டுத் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் (CSR) நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்/ICT Academyயின் தலைவர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., Elcot நிர்வாக இயக்குநர் முனைவர் கே. பி. கார்த்திகேயன், இ.ஆ.ப., தலைமைச் செயல் அலுவலர் திரு. வெ. ஸ்ரீகாந்த், அகாடமியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கார்ப்பரேட் (CSR) நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

# சிவகங்கை அருகே 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமச்சின்னங்கள் கல்வட்டம் கண்டெடுப்பு

சிவகங்கை, ஆக. 22



சிவகங்கை அருகே 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வட்டம் மற்றும் ஈமச்சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டன.பழங்கால கற்கள்சிவகங்கை மாவட்டம், ஒக்கூர்அருகேஉள்ளபிரவலூர் கிராமத்தில் பழங்கால கற்கள் இருப்பதாக இக்கிராமத்தை சேர்ந்த சரவணன், அஜய், மதிச்செல்வம், செந்தூர், பாலசுப்பிரமணியன், மணி ஆகியோர் அளித்த தகவலின் பேரில் அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் வேலாயுதராஜா களஆய்வு மேற்கொண்டார். அப்போது அந்த கற்கள் ஆனது 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங் கற்கால ஈமச்சின்னங்கள் மற்றும் கல்வட்டம் என்பது தெரியவந்தது.இதுகுறித்து அவர் கூறியதாவது:பிரவலூர் கிராமத்தின் வடக்குப்பகுதியில், கடம்பன்குடி கண்மாய்க்கு தெற்கு பகுதியில் பரந்துவிரிந்த ஒரு மேட்டுப்பகுதியும், அதன் அருகில் வறண்ட நிலையில் ஒரு ஓடையும் காணப்படுகிறது. அதன் மேற்பரப்பில் ஏராளமான கல்வட்டங்களும், ஈமத்தாழிகளும் காணப்படுகின்றன. மண் அரிப்பு காரணமாக பெரும்பாலான ஈமத்தாழிகள் வெளியில் நன்கு தெரிகின்றன. மேலும் அதிகமான கல்வட்டங்களும், 2 குத்துக்கற்களும் காணப்படுகின்றன.மேலும் ஆங்காங்கே உடைந்த கருப்பு சிவப்பு நிற பானை ஓடுகளும், இரும்புக்கசடுகளும், குவார்ட்ஸ் வகைக்கற்களும் காணப்படுகின்றன. இவை3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலஈமச்சின்னங்களாகஇருக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இறந்தவர்களை புதைத்த இடத்திலோ அல்லது அவரது எலும்புகளை புதைத்த இடத்திலோ பெரிய கற்களை கொண்டு எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்களை, பெருங்கல்சின்னங்கள்எனகூறுகிறார்கள்.பெருங்கற்கால சின்னங்கள்இங்கு இரும்பை உருக்கி கருவிகள் செய்யப்பட்டிருக்கலாம். ஏனெனில் பிரவலூரில் உள்ள இப்பகுதியில் இரும்பு கசடுகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவை சிவகங்கை மாவட்ட தொல்லியல் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இப்பகுதியில் விரிவான ஆய்வு செய்வ தன்மூலம் மேலும் அதிக தகவல்கள் தெரிய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# 108 ஆம்புலன்சில் கர்ப்பிணி பெண்ணுக்கு சுகப்பிரசவம்.. தாயும் சேயும் நலம்

புதுக்கோட்டை, ஆக. 22

புதுக்கோட்டை மாவட்டத்தில்பிரசவ வலியால்துடித்த நிறைமாத கர்ப்பிணி ஒருவருக்கு ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியிலேயே, 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் அவசரக்கால மருத்துவப் பணியாளர்கள் துரிதமாகச் செயல்பட்டு பிரசவம் பார்த்தனர். இதன் மூலம் அந்தப் பெண்ணுக்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. நடுவழியில் கடுமையான பிரசவ வலிபுதுக்கோட்டை பகுதியைச்சேர்ந்தவர்பொண்ணு(வயது 32).நிறைமாத கர்ப்பிணியானஇவருக்குதிடீரெனகடுமையானபிரசவ வலி ஏற்பட்டது. உடனடியாக அவரது குடும்பத்தினர் 108 அவசர ஆம்புலன்ஸ் சேவைக்குத் தகவல் கொடுத்தனர்.தகவலறிந்துசம்பவஇடத்திற்குவிரைந்து வந்த ஆம்புலன்ஸ் குழுவினர், கர்ப்பிணிப் பெண்ணை ஏற்றிக்கொண்டு அரசு ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர். துரிதமாகச்செயல்பட்டமருத்துவக்குழுஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியில், கர்ப்பிணிப் பெண்ணுக்கு பிரசவ வலி மிகவும்தீவிரமடைந்தது. ஆஸ்பத்திரிக்குச்செல்ல இன்னும் நேரம் எடுக்கும் என்பதை உணர்ந்த ஆம்புலன்ஸ் அவசர மருத்துவ உதவியாளர் மற்றும் ஓட்டுநர், வாகனத்தை பாதுகாப்பான இடத்தில் நிறுத்தினர். தொடர்ந்து, மருத்துவக் கட்டுப்பாட்டு அறையின் உரிய ஆலோசனைகளுடன் ஆம்புலன்ஸ் வாகனத்திலேயே அவசரப் பிரசவம் பார்க்கப்பட்டது.



தாயும் சேயும் நலம்மருத்துவப் பணியாளர்களின் சாதுர்யமான மற்றும் துரிதமான செயல்பாட்டால், பொண்ணு என்றஅந்தப்பெண்ணுக்குசுகப்பிரசவத்தில் அழகான பெண் குழந்தை பிறந்தது. முதலுதவிகள் அனைத்தும்செய்யப்பட்டபின்னர், தாயும்குழந்தையும் பாதுகாப்பாக அருகில் உள்ள அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். தற்போது தாயும் சேயும் நலமாக இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.பாராட்டுகள்சரியான நேரத்தில் உரிய முதலுதவிகளை வழங்கி, 2 உயிர்களைக் காப்பாற்றிய 108 ஆம்புலன்ஸ் மருத்துவ உதவியாளர் மற்றும் ஓட்டுநருக்கு கர்ப்பிணியின் உறவினர்களும் பொதுமக்களும் தங்களது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

# புளியந்தோப்பு பகுதியில் தவறவிட்ட 192 செல்போன்கள் மீட்பு - பொதுமக்களிடம் ஒப்படைத்த போலீசார்

சென்னை, ஆகஸ்ட் 22

சென்னை ஓட்டேரி புளியந்தோப்பு துணைஆணையர்அலுவலகத்தில், புளியந்தோப்பு காவல் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில்கடந்தஆறுமாதங்களில் பேருந்து மற்றும் சாலைகளில் பொதுமக்கள் தவறவிட்ட செல்போன்களைபோலீசார்மீட்டு, உரிய நபர்களிடம் ஒப்படைத்தனர். ஓட்டேரி காவல் நிலையத்தில் பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், மொத்தம் 192 செல்போன்கள் மீட்கப்பட்டன.




காவல்துறை ஆணையர் அமல்ராஜ் உத்தரவின் பேரிலும், கூடுதல் ஆணையர் வழிகாட்டுதலின்படியும், இணைஆணையர்உத்தரவின் பேரிலும், துணை ஆணையர் சமித் சிங் மீனா ஆலோசனையின் படியும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.செம்பியம் உதவி ஆணையர் முரளி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மீட்கப்பட்ட 192 செல்போன்கள்அவற்றைதவறவிட்ட பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டன.கடந்த ஆறு மாதங்களாக கடின உழைப்புடன் செல்போன்களை மீட்ட சைபர் க்ரைம் உதவி ஆய்வாளர் பிரின்சி பிரிடா, தலைமை காவலர்கள் பாட்ஷா, சங்கீதா மற்றும் முதல் நிலைக் காவலர்கள் அப்துல்லா, சங்கீத், கண்ணன், லாவண்யா உள்ளிட்ட போலீசார் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.சைபர் குற்றங்கள் குறித்து எச்சரிக்கைஇதனைத் தொடர்ந்து பேசிய சைபர் க்ரைம் உதவி ஆய்வாளர் பிரின்சி பிரிடா, குறைந்த விலையில் கடைகளில்விற்பனைசெய்யப்படும்செல்போன்களை பொதுமக்கள்வாங்க வேண்டாம் என அறிவுறுத்தினார். திருட்டு செல்போன்கள் சில கடைகளில் விற்பனை செய்யப்படுவதாகவும், இதுபோன்ற செல்போன்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், செல்போனில் ஓடிபி மூலம் பணம் எடுக்கப்படுவதாக சந்தேகத்திற்கிடமான குறுஞ்செய்தி வந்தால், பொதுமக்கள் உடனடியாக 1930 சைபர் கிரைம் ஹெல்ப்லைன் எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.தற்போது மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவதாகக் கூறி தொலைபேசி மூலம் மோசடிகள் நடைபெற்று வருவதாகவும், இதுபோன்ற அழைப்புகளை நம்பி மாணவர்களின்தரவுகள், முகவரிஉள்ளிட்டதனிப்பட்ட தகவல்களை யாரிடமும் பகிர வேண்டாம் எனவும் எச்சரித்தார்.சைபர்மோசடிகளால்பல்வேறுஇடங்களில் GPay உள்ளிட்ட ஆன்லைன் பணப் பரிவர்த்தனைகள் மூலம் பண இழப்பு ஏற்பட்டு வருவதால், பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், சைபர் குற்றங்களைத் தடுப்பதில் போலீசார் தொடர்ந்து தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் பிரின்சி பிரிடா தெரிவித்தார்.தவறவிட்ட தங்களது செல்போன்களை மீட்டுக் கொடுத்த போலீசாருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துக் கொண்டு சென்றனர்.

# ஊழல் கோப்புகளை நிச்சயமாக முதல்அமைச்சர் விஜய் வெளியிடுவார் அமைச்சர் ராஜ்மோகன்

சென்னை, ஆக. 22

ஊழல் கோப்புகளை நிச்சயமாக முதல்அமைச்சர் விஜய் வெளியிடுவார். எதிர்க்கட்சி தலைவரின் கோரிக்கையை முதல்அமைச்சர் விஜய் நிறைவேற்றுவார் என சட்டசபையில் அமைச்சர் ராஜ்மோகன் கூறியுள்ளார். ஜோதிடர் சொல்ல வேண்டுமா?எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதிஸ்டாலின்சட்டசபையில்பேசியதாவது, "தனது டேபிளில் பைல் இருப்பதாகவும், திறந்து பார்க்க வைத்துவிடாதீர்கள் என்று முதல்வர் பேசினார். தயவு செய்து அவர் திறந்து பார்க்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும். எதற்காக பயப்படுகிறீர்கள்? காலம் தாழ்த்துகிறீர்கள்? ஜோதிடர் சொன்னால் தான் திறப்பீர்களா? நல்ல நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? நடவடிகை எடுப்பேன் என உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் பயப்பட மாட்டோம்.ஆளுங்கட்சியினர் எங்களுக்கு பதில் சொல்லும்போது ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டுகின்றனர். சட்டமன்றத்தில் பாட்டெல்லாம் பாடுகிறார்கள். எங்களுக்கு சூப்பர் சிங்கர் நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோமா அல்லது சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோமா என்று சந்தேகப்படும் அளவுக்கு பாட்டு நிகழ்ச்சி நடக்கிறது.நீக்கும் கருத்துகள் ரீல்ஸ்சாக வெளியாகிறதுநீங்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கும் கருத்துகள் ரீல்ஸ்சாக வெளியாகிக் கொண்டிருக்கிறது. நான் பேசியதை நீக்கிவிட்டீர்கள். ஆனால் அது சமூகவலைதளங்களில் வெளியாகிறது. அவைக்குறிப்பில் இருந்து நீக்குவதற்கு அர்த்தம் இல்லாமல்போய்விடுகிறது என்பதைகுறிப்பிடுகிறேன்" என பேசினார்.தொடர்ந்து பதிலளித்த நிர்மல்குமார், 'ஜோசியம் என்று பேசுகிறார்கள்; ஜோசியம் பார்த்து மஞ்சள் துண்டு போட்ட கதையெல்லாம் எங்களுக்கும் தெரியும். எப்போது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ



அப்போது சரியான நேரத்தில் எடுப்போம்' என்று காரசாரமாகத் தெரிவித்தார்.கோப்புகளை திறப்பதில் தயக்கமில்லைஅமைச்சர் ராஜ்மோகன் கூறியதாவது, 'தமிழக சட்டசபையில் நடப்பது எல்லாம் மக்களுக்கு தெரிய வேண்டும். யார் எந்த தொகுதி சார்பாக கேட்கிறார்கள்,அதற்குபதில்சொல்வதுதெரியவேண்டும் என்பதற்காக தான் நேரலை தருகிறோம்.நேரலை என்பது வெறும் ஆளும்கட்சிக்கு சாதகமாக இல்லாமல், முழுமையான நேரலை என்பது தவெக ஆட்சியில் தான் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம். கோப்புகளை திறப்பதில் முதல்அமைச்சருக்கு தயக்கமில்லை. ஊழல் கோப்புகளை நிச்சயமாக முதல்அமைச்சர் விஜய் வெளியிடுவார். எதிர்க்கட்சி தலைவரின் கோரிக்கையை முதல்அமைச்சர் விஜய் நிறைவேற்றுவார்' என ராஜ்மோகன் கூறினார்.நடவடிக்கைசட்டசபையில் அவை குறிப்பிலிருந்து நீக்கியதை வீடியோவாக சமூக வலைதளங்களில் பதிவு செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்தார்.

# பட்டப்பகலில் பெண்ணிடம் கைப்பை பறிப்பு; கல்லூரி மாணவர்கள் 2 பேர் கைது

குளித்தலை, ஆக. 22

குளித்தலை அருகே பட்டப்பகலில் பெண்ணிடம் கைப்பைபறித்தகல்லூரிமாணவர்கள்2பேரைபோலீசார் கைது செய்தனர்.கரூர் மாவட்டம் குளித்தலை அருகே தென்கடை குறிச்சி பகுதியைச் சேர்ந்தவர் ராமதுரை மனைவி அம்பிகா(வயது 34). இவர் தமிழக வெற்றிக் கழகத்தில் கரூர் மாவட்ட மகளிர் அணி செயலாளராக உள்ளார். இவர் நேற்று முன்தினம் மதியம் தனது ஸ்கூட்டரில், தெற்கு மாடு விழுந்தான் பாறை பகுதியை சேர்ந்த காமாட்சி (37) என்பவரை அமர வைத்து கொண்டு வீட்டிலிருந்து குளித்தலை நகரப் பகுதிக்கு செல்வதற்காக கரூர் திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வந்துள்ளார். குளித்தலையில் உள்ள ஒரு தனியார் பள்ளி மேம்பாலம் சர்வீஸ் சாலையில் வந்தபோது பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத 2 பேர் அம்பிகாவின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை பறிக்க முயற்சித்தனர். அப்போது சுதாரித்து சற்று நகர்ந்து கொண்டதால் பின்னால் அமர்ந்து வந்த காமாட்சி கையில் இருந்த கைப்பையை பிடுங்கிக்கொண்டு மர்மநபர்கள் தப்பி சென்றுவிட்டனர்.அந்த கைப்பையில் ரூ.ஆயிரம். ஏ.டி.எம்., பான் கார்டு மற்றும் 2 செல்போன்கள் இருந்தன.

இதனால் பதற்றம் அடைந்த இருவரும் குளித்தலை போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் குளித்தலை போலீசார் நேற்று வழக்குப்பதிந்து அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவான மோட்டார் சைக்கிளின் பதிவு எண்ணை கொண்டு 2 பேரை வலைவீசி தேடி வந்தனர். இதில் கைப்பையை பறித்து சென்ற சென்னை நுங்கம்பாக்கம் புஷ்பா நகரை சேர்ந்த டிப்ளமோ படித்து வரும் கிருஷ்ணமூர்த்தி மகன் முகேஷ் (19) மற்றும் பி.காம். 2ம் ஆண்டு படித்து வரும் மூர்த்தி மகன் புவனேஷ்(19) ஆகிய 2 பேரை குளித்தலை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# த.வெ.க. ஆட்சிக்குப்பின் வீடுகளில் மின்கட்டணம் திடீரென அதிகமாக வந்தது ஏன்? அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

சென்னை, ஆக. 22

தமிழ்நாடு சட்டசபையில் நீதி, சிறை, சட்டம், எரிசக்தி, அறநிலையத் துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.மின் கட்டண உயர்வுஇந்நிலையில் த.வெ.க. ஆட்சிக்கு பின் வீடுகளில் மின்கட்டணம் திடீரென அதிகமாக வந்தது ஏன்? என்று கேள்வி எழுப்பப்பட்டது. மேலும் மின் கட்டண உயர்வு குறித்து, அமைச்சர் ஒன்று சொல்கிறார், நிர்வாகம் ஒன்று சொல்கிறது என்று முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்தார்.டேபிள் ரீடிங்இதற்கு சட்டப்பேரவையில் பதிலளித்து பேசிய மின் துறை அமைச்சர் நிர்மல்குமார், "மின்வாரியம் தானாக 3 லட்சத்திற்கு அதிகமான இணைப்புகளை மறு ஆய்வு செய்த போது, 2,719 மிஸ் மேட்ச் ஆனது. தவறான கணக்கிடுதலால் அது நடந்தது. டேபிள் ரீடிங் என்று ஒன்றை செய்து வந்துள்ளனர். நேரடியாக ரீடிங் செய்யாமல், முந்தைய ரீடிங்கை கணக்கில் செய்துள்ளனர். நேரடியாக ரீடிங் எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.4 அமைச்சர்கள்செய்தியாளர் சந்திப்பில் நான் தடித்த வார்த்தைகளை பேசுவதாக செந்தில் பாலாஜி குறிப்பிட்டார். 45 டெண்டர்களில் முறைகேடு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையும் நடந்து வருவது அவருக்கு தெரியும்கடந்த ஆட்சியில் மின்துறையில் 4 அமைச்சர்கள் மாற்றப்பட்டனர். 2021க்கு பின்னர்



மின்துறை அமைச்சர் சிறைக்குச் செல்கிறார். பின்னர் இன்னொரு அமைச்சர், இன்னொரு அமைச்சர் என மின்துறைக்கு 4 அமைச்சர்கள் கடந்த ஆட்சியில் வந்துள்ளனர்" என்று அவர் கூறினார்.இதனிடையே முன்னாள அமைச்சர் செந்தில் பாலாஜி பேசுகையில், "மின்வாரிய கொள்கை விளக்க குறிப்பை படித்தேன். 5 பக்கங்களில் தான் டேட்டாக்கள் இருக்கிறது. மீதமெல்லாம்புள்ளிவிபரம்இல்லாதபழைய குறிப்புகள் தான் உள்ளது. 3,437 கேங் மேன் மாறுதல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை யாரும் விடுவிக்கப்படவில்லை" என்று கூறினார்.

# மனைவியின் கள்ளக்காதல்.. கண்டித்தும் தொடர்ந்த தகாத உறவு: தச்சுத்தொழிலாளி எடுத்த விபரீத முடிவு

மயிலாடுதுறை, ஆக. 22

மனைவியின் தகாத உறவால் தச்சுத்தொழிலாளி ஒருவர் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவத்தில், அவரது மனைவியின் கள்ளக்காதலன் கைது செய்யப்பட்டார். தச்சுத்தொழிலாளிமயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள வேட்டங்குடி கிராமம் மெயின் ரோட்டைச் சேர்ந்தவர் வெங்கடேசன் (வயது 44). தச்சுத்தொழிலாளியான இவருக்கும், மயிலாடுதுறையை சேர்ந்த துர்காதேவி (41) என்பவருக்கும் 11 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளன.தகாத உறவுகடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வெங்கடேசன் வெளிநாட்டுக்கு வேலைக்கு சென்றார். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு மீண்டும் தனது ஊரான வேட்டங்குடிக்கு திரும்பி வந்தார்.இந்த நிலையில் அதே கிராமத்தில் வெங்கடேசன் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசித்து வரும் பாலகுருவுக்கும் (40), வெங்கடேசன் மனைவி துர்கா தேவிக்கும் இடையே தகாத உறவு இருந்து வந்தது. இவர்களது தகாத உறவு வெங்கடேசனுக்கு தெரிய வந்தது.தாய் வீட்டிற்கு சென்ற மனைவிஇதனால் கடந்த 15 நாட்களுக்கு முன்பு துர்காதேவியை வெங்கடேசன் திட்டினார். இதில் கோபித்துக்கொண்டு மயிலாடுதுறை அருகே உள்ள சோழ சக்கரநல்லூரில் உள்ள தனது தாய் வீட்டிற்கு துர்காதேவி சென்று விட்டார்.துர்காதேவி தனது தாய்



வீட்டிற்கு சென்ற பிறகும் பாலகுரு அவருடன் தொடர்ந்து பேசி உறவு வைத்து இருந்ததாக கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த வெங்கடேசன் நேற்று முன்தினம் தனது வீட்டிற்குள் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.போலீசார் வழக்குப்பதிவுஇந்த நிலையில் அவர் இறப்பதற்கு முன்பு செல்போன் வாட்ஸ் அப்பில் தனது சாவுக்கு பாலகுரு தான் காரணம் என்றும் பதிவிட்டுள்ளார். இது சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது. இதுகுறித்து புதுப்பட்டினம் போலீசார் வழக்குப்பதிவு செய்து வெங்கடேசனை தற்கொலைக்கு தூண்டியதாக பாலகுருவைகைதுசெய்தனர்.மேலும்தலைமறைவான துர்காதேவியை தேடி வருகின்றனர்.

# விஜய்க்கு இருக்கும் திமிர்தான் ஜெயலலிதாவுக்கும் இருந்தது.. கடைசியில என்ன நடந்துச்சு? ஆர்.எஸ்.பாரதி சர்ச்சை பேச்சு

சென்னை, ஆக. 22

சென்னை திருவொற்றியூரில் நடைபெற்ற திமுக பொதுக் கூட்டத்தில் கட்சியின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசியதாவது:விஜய் அவர்களே.. திருவொற்றியூர் கூட்டம் வாயிலாக உங்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். இப்பத்தான் உங்களுக்கு கேடு காலம் ஆரம்பித்துள்ளது. இப்படித்தான் 1991ம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்குவந்தபோது டான்சிநிலவிவகாரம் பிரச்சனையானது. ஆட்சிக்குவந்த இரண்டே மாதங்களில் முதல்அமைச்சர்விஜய் டெண்டரில் ஊழல் செய்துள்ளார். அதேபோல 1991ம் ஆண்டு அதிமுக ஆட்சிக்கு வந்த இரண்டே மாதங்களில் டான்சி நிலம் வாங்கப்பட்டது. நான்தான் முதல்முதலாக அது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். அந்த ஆவணங்களை எல்லாம் பார்த்து தப்பு என்று நான் தான் கூறினேன்.அந்தம்மா வேறுஏதும்உலகமகாதப்புசெய்யவில்லை.அந்தம்மாவே நிலம் வாங்கியதை ஒப்புக் கொண்டார். இன்றைக்கு முதல்அமைச்சர்விஜய்க்குஇருக்கும்திமிரைபோலத்தான் அன்றைக்கு ஆட்சிக்கு வந்த முதல்முறை ஜெயலலிதாவுக்கும் திமிர் இருந்தது. காரணம் எதிர்க்கட்சியில் யாரும் இல்லை. ஒரே ஒரு கலைஞர் மட்டும் தான் வெற்றி பெற்றார். டான்சி நிலம் வாங்கினேன். அதில் என்ன தவறு என கேட்டார். அவராக



வாய் விட்டு சிக்கி கொண்டார். அதுதான் கடைசிவரை அந்த அம்மாவை சிறைக்கு கொண்டு சென்றது.இந்த ஆட்சியிலும் முதல் வழக்கே அப்படித்தான் ஆரம்பித்துள்ளது.

இப்போதே சொல்கிறேன், சென்டிமென்டலாக முதன்முதலாக இவரும் அந்த இடத்தில் இருந்து தான் ஆரம்பித்துள்ளார். கடைசியாக ஜெயலலிதாவுக்கு என்ன நடந்தது என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. இவ்வாறு அவர் கூறினார். ஆர்.எஸ். பாரதியின் இந்த பேச்சுக்கு கண்டனங்கள் எழுந்துள்ளன

# பழனி கோவிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு மகிழ்ச்சி செய்தி! தினமும் 10 ஆயிரம் பேருக்கு அன்னதானம்

பழனி, ஆக. 22

பழனி மலைக்கோவிலுக்கு பக்தர்கள் வருகை அதிகரித்துள்ளதால் தினமும் 10 ஆயிரம் பேருக்கு உணவு வழங்க கோவில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.பழனி முருகன் கோவில்அறுபடை வீடுகளில் 3ம் படைவீடான பழனி முருகன் கோவிலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், திருவிழா மற்றும் விசேஷ நாட்களில் லட்சக்கணக்கான பக்தர்களும் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். அவ்வாறு வரும் பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் கடந்த 13.9.2012 முதல் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை மலைக்கோவிலில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.இந்த அன்னதானத்தில் பக்தர்களுக்கு சாதம், ரசம், பொரியல், கூட்டு, அப்பளம்,


பாயசம் மற்றும் மோர் உள்ளிட்ட உணவுகள் தரமாகவும், சுவையாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் அன்னதானத்தில் உணவு சாப்பிடும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதுவரை மலைக்கோவிலில் தினமும் சராசரியாக 5 ஆயிரம் பக்தர்களும். கூட்டம் அதிகமாக இருக்கும் நாட்களில் 7 ஆயிரம் பக்தர்கள் வரையிலும் அமர்ந்து அன்னதானம் சாப்பிட்டு வந்தனர். ஒரு பந்தியில் 204 பக்தர்கள் அமர்ந்து சாப்பிடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எண்ணிக்கை விரிவாக்கம்இந்நிலையில் பழனி முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதையடுத்து. அன்னதானம் வழங்கும் வசதியை விரிவுபடுத்த கோவில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.அதன்படிமலைக்கோவிலில்4இடங்களில் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு பந்தியில் 204 பேர் அமர்ந்து சாப்பிடும்



வகையில் இருந்த எண்ணிக்கை தற்போது 410 பேராக அதிகரிக்கப்பட்டுள்ளது.பக்தர்கள் மகிழ்ச்சிமேலும், மலைக்கோவில் அன்னதான மடத்தில் பக்தர்கள் காத்திருக்கும் அறை மாற்றியமைக்கப்பட்டு, கூடுதல்இடவசதியுடன் அன்னதானம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதேபோல் மேலும் 2 இடங்களிலும் அன்னதானம் வழங்கும் வசதி தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒரே நேரத்தில் அதிக எண் ணிக்கையிலான பக்தர்கள் அன்னதானம் சாப்பிடும் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், தினமும் சுமார் 10 ஆயிரம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்காமல் அன்னதானம் சாப்பிடும் வகையிலும், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் வகையிலும் இந்த விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலைக்கோவிலில் அன்னதானம் வழங்கும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் இறந்து மிதந்ததற்கு தொழிற்சாலை கழிவுகள் காரணமா..? அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 22



சென்னை எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் இறந்து மிதந்தது தொடர்பாக சட்டசபையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிசிறப்புகவனஈர்ப்புதீர்மானம் கொண்டு வந்து பேசினார்.எடப்பாடி பழனிசாமிஅப்போது அவர் கூறுகையில், "எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் கழிவுகள் கலப்பதால் மீன்கள் கொத்து கொத்தாக செத்து மிதக்கின்றன. இதனால் அந்த பகுதியில் வசித்து வரும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.தொழிற்சாலைகளின்கழிவுகள் நீரில் கலப்பதால் இந்த நிலை ஏற்பட்டதாக மீனவர்கள் கூறுகின்றனர். கழிவுகள் ஆற்றில் கலப்பதால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அரசு உடனடியாக தலையிட்டு மீனவர்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.அமைச்சர் ராஜீவ்இந்நிலையில் எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் செத்து மிதந்த விவகாரம் தொடர்பாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ராஜீவ் விளக்கம் அளித்தார்.இதுதொடர்பாக சட்டசபையில் பேசிய அவர், "எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் இறந்துமிதந்ததற்கு தொழிற்சாலைக்கழிவுகள்காரணம் அல்ல. மனிதக் கழிவுகள் உள்பட கழிவு நீர் கலப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம் என தெரியவருகிறது. எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் செத்து மிதந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. 10 நாட்களுக்குள் விரிவான அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்று அமைச்சர் ராஜீவ் கூறினார்.முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசுஇதனிடையே முன்னாள் அமைச்சர்தங்கம்தென்னரசுபேசுகையில், ""சென்னையின் ஜீவாதாரமாக விளங்கும் வடசென்னை கொசஸ்தலை ஆறு மற்றும் அதன் முகத்துவாரப் பகுதிகள், தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் தொடர்ந்து மாசடைந்து வருகின்றன. ஆற்றில் மீன்கள் செத்து மிதப்பது வாடிக்கையாகிவிட்டதால், அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, கொசஸ்தலை ஆற்றுப் பகுதியைச் சூழலியல் மண்டலமாக அறிவித்து, அரசு உடனடியாகத் தலையிட்டுத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.பாமக சட்டமன்ற உறுப்பினர் கணேஷ்குமார்இதேபோல் பாமக சட்டமன்ற உறுப்பினர் கணேஷ்குமார் கூறுகையில், "சென்னையின் முக்கிய நதிகளில் ஒன்றான கொசஸ்தலை ஆற்றில், அனல் மின் நிலையங்கள் மற்றும் ரசாயன தொழிற்சாலைகளின் கழிவுகள் கலப்பதால் மீன்கள் செத்து மிதக்கிறது. மீன்கள் செத்து மிதப்பது முதல் முறை அல்ல. இதனை தடுத்து சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் பாதுகாக்க தனியாக ஆணையம் அமைக்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்

# குன்னூரில் கார் செங்குத்தாக கவிழ்ந்து விபத்து

நீலகிரி, ஆக. 22



நீலகிரி மாவட்டம் குன்னூர் மலைப்பாதைப் பகுதியில் ஆன்மீகப்பயணமாககோவிலுக்குச் சென்று கொண்டிருந்த 3 பேர் பயணித்த கார், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரத்தில் செங்குத்தாக தலைகீழாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.காரில்இருந்த 3 பேரும் அதிர்ஷ்டவசமாக பெரும் ஆபத்தின்றி உயிர் தப்பினர்.விபத்துகோவிலுக்குச் செல்வதற்காக 3 பேர், காரில் குன்னூர் மலைப்பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தனர். வளைவுகள் நிறைந்த மலைப்பாதைப் பகுதியில் கார் சென்றபோது, எதிர்பாராதவிதமாக ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார், சாலையின் ஓரத்தில் செங்குத்தாக கவிழ்ந்து நின்றது. கார் தலைகீழாக நின்ற காட்சியைக் கண்டு அந்த வழியாக வந்த பிற வாகன ஓட்டிகள் அதிர்ச்சியடைந்தனர்.மீட்புப் பணிகள் ஆஸ்பத்திரியில் அனுமதிவிபத்து நடந்த உடனே, அங்கிருந்த உள்ளூர் பொதுமக்களும் பிற வாகன ஓட்டிகளும் காரின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 3 பேரையும் பத்திரமாக வெளியே மீட்டனர். தகவல் அறிந்து வந்த போலீசார் மற்றும் மீட்புக் குழுவினர்,காயமடைந்தவர்களை முதலுதவி மற்றும் சிகிச்சைக்காக உடனடியாக குன்னூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

போக்குவரத்து சீரமைப்புமலைப்பாதையின் முக்கிய வளைவில் இந்த விபத்து நிகழ்ந்ததால், குன்னூர் வழித்தடத்தில் சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விபத்துக்குள்ளான காரை அப்புறப்படுத்தி, போக்குவரத்தைச் சீரமைத்த னர்.

மலைப்பாதைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள் தங்களின் வேகத்தைக் குறைத்து, எச்சரிக்கையுடன் வாகனங்களை இயக்க வேண்டும் என போக்குவரத்துப் போலீசார் மீண்டும் அறிவுறுத்தியுள்ளனர்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
22.08.2026

# எண்ணூர்-மாமல்லபுரம் சாலைக்கான நிலம் எடுப்பு பணிகள் தீவிரம்



சென்னை, ஆக. 22
சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெருகி வரும் போக்குவரத்து மற்றும் எண்ணூர் துறைமுகத்தில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் கனரக வாகனங்களால் நெரிசல் ஏற்படுகிறது. இதனை குறைப்பதற்காக தமிழக நெடுஞ்சாலைத் துறை சார்பில் எண்ணூர் முதல் மாமல்லபுரம் வரை 132.87 கி.மீ. தூரத்துக்கு ரூ.17 ஆயிரத்து 958 கோடி மதிப்பில் சென்னை எல்லை சாலை திட்டப்பணிகள் 5 கட்டங்களாக நடந்து வருகின்றன. முதல்கட்டமாக காட்டுப்பள்ளி முதல் பஞ்செட்டி வரை 25 கிலோ மீட்டர் தூரத்தில் நடந்து வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில், தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை வரையிலான 26.10 கி.மீ. நீளத்திற்கு பணிகளின் ஒரு தொகுப்பு நிறைவடைந்து உள்ளது. தற்போது, திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு கண்டிகை பகுதி யில் ஒரு குறிப்பிட்ட நன்செய், புன்செய் நிலங்களை தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழ் நிலம் எடுப்பு செய்ய அரசு முடிவு செய்துள்ளது. ஆட்சேபனை இருந்தால் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்கள், சென்னை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சிட்கோ கிளை அலுவலக வளாகத்தில் 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக் கலாம் என்று நெடுஞ்சாலைத்துறை சார்பில் அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. எண்ணூர் முதல் மாமல்லபுரம் வரையிலான சாலை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்துக்கு பல்வேறு உதவிகள் தேவைப்படுவதால், அதுதொடர்பாக ஆய்வுசெய்யப்பட்டுவருகிறது. தொடர்ந்து, மீதம் உள்ள அனைத்து பணிகளும் ஓராண்டுக்குள் நிறைவடைந்து பயன்பாட்டுக்கு வர உள்ளது. அதேபோல், சென்னையில் போக்குவரத்து நெரிசலை பெருமளவு குறைப்பதற்காக பெரும்பாலான சாலைகள் உலகத்தரத் தில் 6 வழிச் சாலைகளாக மாற்றப்பட உள்ளன என்று தமிழக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறினர்.

# உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் வருகிற 1ந் தேதி முதல் கட்டணம் உயர்வு




உளுந்தூர்பேட்டை, ஆக. 22
உளுந்தூர்பேட்டை அருகே சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள செங்குறிச்சி சுங்கச்சாவடியில், அடுத்த மாதம் 1ந் தேதி முதல் சுங்கக் கட்டணம் உயர்த்தப்படுகிறது. இதுதொடர்பாக திருச்சி டோல்வே பிரைவேட் லிமிடெட் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கார், ஜீப், வேன் உள்ளிட்ட வாகனங்களுக்கு ஒரு முறைபயணம்செய்வதற்கானகட்டணம்மாற்றமின்றி ரூ.70ஆகவேதொடரும்எனதெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நாளில் பலமுறை சென்று வருவதற்கான கட்டணம் ரூ.100ல் இருந்து ரூ.105 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாதாந்திர பாஸ் கட் டணம் ரூ.2,125 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலகு ரக வணிக வாகனங்களுக்கான ஒரு முறை பயணக் கட்டணம் ரூ.120ல் இருந்து ரூ.125 ஆகவும், பலமுறை பயணக் கட்டணம் ரூ.180ல் இருந்து ரூ.185 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.3,715 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல் லாரி மற்றும் பேருந்துகளுக்கான ஒரு முறை பயணக் கட்டணம் ரூ.240ல் இருந்து ரூ.250 ஆக வும், பலமுறை பயணக் கட்டணம் ரூ.355ல் இருந்து ரூ.370 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.7,435 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்வகை அச்சு கொண்ட கனரக வாகனங்களுக்கான ஒரு முறை பய ணக் கட்டணம் ரூ.380ல் இருந்து ரூ.400 ஆகவும், பலமுறை பயணக் கட் டணம் ரூ.575ல் இருந்து ரூ.595 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.11,950 ஆகும்.

மேலும், செப்டம்பர் 1ந் தேதி முதல் அமலுக்கு வரும் இந்த கட்டண உயர்வால், வாகன ஓட்டிகள் மற் றும் சரக்கு வாகன உரிமையாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (22.08.2026)

மேஷம்
இன்று நாள் முழுவதும் உற்சாகம் நிறைந்திருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

ரிஷபம்
குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபச் செய்திகளும் வந்து சேரும். நிதி நிலைமை சீராக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

மிதுனம்
பேச்சில் நிதானம் தேவை. தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரக்கூடும்.

கடகம்
திட்டமிட்ட வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

சிம்மம்
புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். தொழில் வளர்ச்சி அடையும். கடன் பிரச்சனைகள் குறைய வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

கன்னி
நீண்ட நாட்களாக தடைபட்ட காரியங்கள் சிறப்பாக முடிவடையும். பணியிடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான சூழல் நிலவும்.

துலாம்
சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதில் அமைதியும் தெளிவும் உண்டாகும். நிதானமாகச் செயல்படுவது நல்லது.

விருச்சிகம்
பொருளாதார ரீதியாக சிறப்பான நாள். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

தனுசு
உத்தியோகத்தில் பொறுப்புகளும் முன்னேற்றமும் கூடும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையின் வழியில் ஆதாயம் உண்டாகும்.

மகரம்
ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூரச் செய்திகள் அனுகூலமாக இருக்கும். தொழில் ரீதியான அலைச்சல் குறையும்.

கும்பம்
வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. மாலையில் நல்ல மாற்றம் உண்டாகும்.

மீனம்
கணவன்மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். பிரிந்த நண்பர்கள் மீண்டும் இணைய வாய்ப்புள்ளது.

# வீட்டில் பதுக்கி வைத்திருந்த 1,100 கிலோ ரேஷன் அரிசி பறிமுதல்: முதியவர் கைது

தஞ்சை, ஆக. 22
தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தில் இட்லி மாவு தயாரிக்கும் தொழிலுக்காக வீட்டில் பதுக்கி வைத்திருந்த 1,100 கிலோ ரேஷன் அரிசியை போலீசார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக முதியவரை போலீசார் கைது செய்தனர்.
பொதுமக்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் ரேஷன் அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தி யாவசியப் பொருட்கள் கள்ளச்சந்தையில் விற்பனை செய்யப்படுவதை தடுக்கும் வகையில் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்த நிலையில் அதிராம்பட்டினம் பகுதியில் ரேஷன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தஞ்சை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு தடுப்பு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் போலீஸ் இன்ஸ்பெக் டர் ஜெகதீஸ்வரன் தலைமையில், சப்இன்ஸ்பெக்டர் பூர்விகா மற்றும் போலீசார் அதிராம்பட் டினத்தில் உள்ள சம்சுதீன் (வயது 66) என்பவருடைய வீட்டில் சோதனை நடத்தினர்.
அப்போது அங்கு 50 கிலோ எடை கொண்ட 22 மூட்டைகளில் மொத்தம் 1,100 கிலோ ரேஷன் அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் நடத்தியவிசாரணையில், அதிராம்பட்டினம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பொதுமக்களிடம் இருந்து ரேஷன் அரிசியை சேகரித்து, இட்லி மாவு தயாரிக்கும் தொழிலுக்காக அவர் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து ரேஷன் அரிசியை போலீசார் பறிமுதல் செய்த னர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் சம்சுதீனை கைது செய்தனர்.

# 85 அடியை நெருங்கும் மேட்டூர் அணை



சென்னை, ஆக. 22
கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கேஆர்எஸ் அணைகளில் இருந்து சுமார் 14 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படும் நிலையில், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 12 ஆயிரம் கனஅடியாக தொடர்கிறது. இதன்காரணமாக மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 12 ஆயிரத்து 106 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 10 ஆயிரத்து 692கனஅடியாககுறைந்தது. நேற்று முன்தினம் 83.52 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று 84.50 அடியாக உயர்ந்தது. இந்த நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று காலை நிலவரப்படி 10,579 கன அடியாக உள்ளது. அணையின் நீர் மட்டம் 84.95அடியாகஉள்ளது.குடிநீர்தேவைக்காக அணையில் இருந்து 2000 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.நீர்இருப்பு47.067 டி.எம்.சி. ஆகஉள்ளது.திறக்கப்படும்நீரின் அளவை விட, வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 85 அடியை நெருங்கியுள்ளது.

# கரீபியன் பிரீமியர் லீக்: நெவிஸ் பேட்ரியாட்சை வீழ்த்தி அன்டிகுவா அபார வெற்றி




14வது கரீபியன் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் கடந்த 7ம்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த டி20 கிரிக்கெட் தொடரில் அன்டிகுவா அண்ட் பார்புடா பால்கன்ஸ், பார்படோஸ் ட்ரைடென்ட்ஸ், கயானா அமேசான் வாரியர்ஸ், செயின்ட் லூசியா கிங்ஸ், செயின்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸ் பேட்ரியாட்ஸ், ட்ரின்பகோ நைட் ரைடர்ஸ், ஜமைக்கா கிங்ஸ்மென் ஆகிய 7 அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், கரீபியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெற்ற 12வது லீக் ஆட்டத்தில் அன்டிகுவா அண்ட் பார்புடா பால்கன்ஸ் செயின்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணிகள் மோதின. இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற அன்டிகுவா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய நெவிஸ் பேட்ரியாட்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 187 ரன்கள் குவித்துள்ளது. அந்த அணியின் துஷன் சனகா அதிகபட்சமாக 17 பந்துகளில் 49 ரன்கள் விளாசினார். அன்டிகுவா தரப்பில் அந்த அணியின் ஸ்பிரிங்கர் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனை தொடர்ந்து 188 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் அன்டிகுவா 19.3 ஓவரில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 191 ரன்கள் எடுத்தது. சிறப்பாக ஆடிய இவின் லிவிஸ் 48 ரன்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

# கடைசி டெஸ்ட்: ஆஸ்திரேலியா வங்காளதேசம் இன்று மோதல்



ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வங்காளதேச கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. அதன்படி, இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி கடந்த 13ம் தேதி தொடங்கி நடைபெற்றது. பரபரப்பாக நடந்த இந்த டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியாவை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி வங்காளதேசம் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் ஆஸ்திரேலியாவை முதல் முறையாக அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி வங்காளதேசம் வரலாறு படைத்தது. இந்நிலையில், ஆஸ்திரேலியா வங்காளதேசம் இடையேயான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நாளை நடைபெற உள்ளது. மெக்கெ மைதானத்தில் இந்திய நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு ஆட்டம் தொடங்குகிறது. இப்போட்டியில் வெற்றிபெற்று வரலாற்று சாதனைபடைக்க வங்காளதேசம் முயற்சிக்கும். அதேவேளை, ஏற்கனவே ஏற்பட்ட தோல்விக்கு பழிதீர்க்கவும், தொடரை சமன் செய்யவும் ஆஸ்திரேலியா போராடும். இதனால் நாளை நடைபெறும் கடைசி டெஸ்ட் போட்டியில் பரபரப்பிற்கு பஞ்சம் இருக்காது என ரசிகர்கள் கருதுகின்றனர்.

# கரீபியன் பிரீமியர் லீக்: அன்டிகுவாவுக்கு 188 ரன்கள் இலக்கு நிர்ணயித்த நெவிஸ் பேட்ரியாட்ஸ்



14வது கரீபியன் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் கடந்த 7ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த டி20 கிரிக்கெட் தொடரில் அன்டிகுவா அண்ட் பார்புடா பால்கன்ஸ், பார்படோஸ் ட்ரைடென்ட்ஸ், கயானாஅமேசான்வாரியர்ஸ், செயின்ட்லூசியாகிங்ஸ், செயின்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸ் பேட்ரியாட்ஸ், ட்ரின்பகோ நைட் ரைடர்ஸ், ஜமைக்கா கிங்ஸ்மென் ஆகிய 7 அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், கரீபியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெற்று வரும் 12வது லீக் ஆட்டத்தில் அன்டிகுவா அண்ட் பார்புடா பால்கன்ஸ் செயின்ட் கிட்ஸ் அண்ட் நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணிகள் மோதி வருகின்றன. இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற அன்டிகுவா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய நெவிஸ் பேட்ரியாட்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 187 ரன்கள் குவித்துள்ளது. அந்த அணியின் துஷன் சனகா அதிகபட்சமாக 17 பந்துகளில் 49 ரன்கள் விளாசினார். அன்டிகுவா தரப்பில் அந்த அணியின் ஸ்பிரிங்கர் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதையடுத்து 188 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் அன்டிகுவா களமிறங்கி விளையாடி வருகிறது.

# `ஜெயிலர் 2' படத்தின் 'அலா போலேலோ' பாடலின் 2வது புரோமோ வெளியீடு



ரஜினி – நெல்சன் கூட்டணி உருவாகியுள்ள 'ஜெயிலர் 2' படத்தின் பர்ஸ்ட் சிங்கிளான 'அலா போலேலோ' பாடல் இன்று வெளியாக உள்ளது. இந்த நிலையில், இந்த பாடலின் முதல் புரோமோவை தொடர்ந்து இரண்டாவது புரோமோ வீடியோயும் வெளியாகி உள்ளது. நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் கடந்த 2023ம் ஆண்டு வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. ரம்யா கிருஷ்ணன், மிர்ணா, விநாயகன், வசந்த் ரவி உள்ளிட்ட பலர் நடித்திருந்த இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்திருந்தது. அனிருத் இசையமைத்திருந்தார். ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்ற இப்படம், உலகளவில் ரூ.600 கோடிக்கும் மேல் வசூலித்ததாக கூறப்பட்டது. 'ஜெயிலர்' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது அதன் இரண்டாம் பாகமான 'ஜெயிலர் 2' திரைப்படம் உருவாகி வருகிறது. மீண்டும் ரஜினிகாந்த் நெல்சன் திலீப்குமார் கூட்டணி இணைந்துள்ளதால், இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. முதல் பாகத்தைப் போலவே இரண்டாம் பாகத்திலும் மோகன்லால், சிவராஜ்குமார் ஆகியோர் முக்கிய கேமியோ கதாபாத்திரங்களில் நடித்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் ரம்யா கிருஷ்ணன், பாலிவுட் நடிகர் மிதுன் சக்கரவர்த்தி, சந்தானம், சுராஜ் வெஞ்சரமூடு, யோகி பாபு உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். 'ஜெயிலர் 2' படத்தின் படப்பிடிப்பு தமிழகம், கேரளா, கர்நாடகா, கோவா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது. தற்போது படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இப்படம் அக்டோபர் 15ம் தேதி வெளியாகவுள்ளது. 'ஜெயிலர் 2' படத்தின் பர்ஸ்ட் சிங்கிளான 'அலா போலேலோ' என்ற பாடல் இன்று வெளியாக உள்ளது. இந்த நிலையில், அனிருத் இசையமைத்து பாடியுள்ள இந்த பாடலின் முதல் புரோமோ வீடியோ நேற்று முன்தினம் வெளியாகி பாடலின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்தது. அதனை தொடர்ந்து 'அலா போலேலோ' பாடலின் இரண்டாவது புரோமோவீடியோவையும்படக்குழுவெளியிட்டுள்ளது. இந்தவீடியோவில்நடிகைபூர்ணாசிறப்புதோற்றத்தில்நடனமாடியுள்ளார். 'ஜெயிலர்' முதல் பாகத்தில் நடிகை தமன்னா, 'காவாலா' பாடலுக்கு நடனமாடியிருந்தார். அப்பாடல் மிகப்பெரிய ஹிட் அடித்தது. அதேபோல், பூர்ணாவின் நடன அசைவுகள் கவனிக்க வைப்பதால் இப்பாடலும் ஹிட் அடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# `மொத ராத்திரி' படம் : "சரியான தலைப்புன்னு தோணுச்சு" நடிகர் சூரி பதிவு




ரிஷிகாந்த் மற்றும் அனிஷ்மா அனில்குமார் நடித்துள்ள 'மொத ராத்திரி' படத்தை பாராட்டி நடிகர் சூரி பதிவிட்டுள்ளார். அதில், மொத ராத்திரி' படத்தோட தலைப்பு கொஞ்சம் வித்தியாசமா தெரிஞ்சாலும், படத்தைப் பார்த்ததுக்கப்புறம் இதுதான் சரியான தலைப்புன்னு தோணுச்சு... படம் வேற லெவல்... நிச்சயம் வெற்றிபெறும். என்று தெரிவித்துள்ளார்.தமிழ் மற்றும் மலையாள திரையுலகில் கவனம் ஈர்த்து வரும் நடிகை அனிஷ்மா. கடந்த 2023ல் வெளியான மலையாள திரைப்படமான 'பூவன்' மூலம் திரையுலகில் அறிமுகமான இவர், தமிழில் சமீபத்தில் வெளியான 'சிறை' மற்றும் 'யூத்' படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார்.'மொத ராத்திரி'தற்போது, மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகி வரும் 'மொத ராத்திரி' படத்தில் அனிஷ்மாகதாநாயகியாக நடித்துள்ளார். ராஜாகருப்பசாமி இயக்கியுள்ள இப்படத்தில் ரிஷிகாந்த் மற்றும் அனிஷ்மா அனில்குமார் ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு பரத் ஷங்கர் இசையமைக்கிறார். புதிதாகத் திருமணமான ஜோடியின் வாழ்வில் நடைபெறும் காதல், நகைச்சுவைத் தொடர்பான கதைக்களத்தில் இப்படம் உருவாகியுள்ளது. ஆகஸ்ட் 21ல் ரிலீஸ்இப்படம் ஆகஸ்ட் 21ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதற்கிடையில், இந்த படத்திலிருந்து 'டை டக்கா' , 'முதலா முடிவா', என்ற பாடல்கள் வெளியாகி வரவேற்பை பெற்றன.படம் நிச்சயம் வெற்றிபெறும் சூரி வாழ்த்துஇந்த நிலையில், நடிகர் சூரி 'மொத ராத்திரி' படத்தின் சிறப்பு காட்சியை பார்த்தபின் படக்குழுவினரை வாழ்த்தியும், படம் குறித்தும் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், 'மொத ராத்திரி' படத்தோட தலைப்பு கொஞ்சம் வித்தியாசமா தெரிஞ்சாலும், படத்தைப் பார்த்ததுக்கப்புறம் இதுதான் சரியான தலைப்புன்னு தோணுச்சு... குலதெய்வ வழிபாட்டுல ஆரம்பிச்சு, கண்மூடித்தனமான காதலின் எதார்த்தத்தையும், குடும்ப உறவுகளுக்குள் நடக்கும் அலப்பறைகளையும் காட்டியிருக்கும் விதம் வேற லெவல்...படத்தில் நடித்த அனைவருக்கும்... குறிப்பா இயக்குநருக்கும் மற்றும் மைத்ரி நிறுவனம் மற்றும் படக்ழுவினர் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துகள். படம் நிச்சயம் வெற்றிபெறும். என்று தெரிவித்துள்ளார்.

# "கடின உழைப்பு மட்டும் வெற்றியைத் தீர்மானிக்காது" இயக்குநர் பி.எஸ்.மித்ரன்

சமீபத்திய பேட்டி ஒன்றில் தனது படங்களின் வெற்றி, தோல்வி குறித்து பி.எஸ்.மித்ரன் மனம் திறந்து பேசியுள்ளார். அவர் கூறுகையில், "'இரும்புத்திரை' வெற்றிக்குப் பிறகு 'ஹீரோ' தோல்வியடைந்தது என் கண்களைத் திறந்தது. கடினமாக உழைத்தால் மட்டும் வெற்றி கிடைக்காது" என்று குறிப்பிட்டுள்ளார்.'சர்தார் 2' படத்தை இயக்கும் மித்ரன்தமிழ் சினிமாவில் வித்தியாசமான கதைக்களங்களை இயக்கி கவனம் பெற்றவர் இயக்குநர் பி.எஸ்.மித்ரன். 'இரும்புத்திரை', 'ஹீரோ', 'சர்தார்' உள்ளிட்ட படங்களை இயக்கியுள்ள இவர், தற்போது நடிகர் கார்த்தியை வைத்து 'சர்தார் 2' படத்தை இயக்கி வருகிறார். ஸ்பை திரில்லர் கதைக்களத்தில் உருவாகி வரும் இப்படம் விரைவில் திரைக்கு வர உள்ளது.வெற்றி பெற்ற 'இரும்புத்திரை'.. எதிர்பார்ப்பை ஏமாற்றிய 'ஹீரோ'பி.எஸ்.மித்ரன் இயக்கத்தில் விஷால் நடிப்பில் கடந்த 2018ம் ஆண்டு வெளியான 'இரும்புத்திரை' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றதுடன், விமர்சன ரீதியாகவும் பாராட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து 2019ம் ஆண்டு சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான 'ஹீரோ' திரைப்படத்தை மித்ரன் இயக்கினார். கல்வி மற்றும் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட இப்படம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறாமல் கலவையான விமர்சனங்களை பெற்றது."ஹீரோ' தோல்வி என் கண்களைத் திறந்தது"இந்த நிலையில், சமீபத்திய பேட்டி ஒன்றில் தனது படங்களின் வெற்றி, தோல்வி குறித்து பி.எஸ்.மித்ரன் மனம் திறந்து பேசியுள்ளார். அவர் கூறுகையில், "'இரும்புத்திரை' வெற்றிக்குப்பிறகு 'ஹீரோ' தோல்வியடைந்தது என்கண்களைத்திறந்தது. கடினமாக உழைத்தால் மட்டும் வெற்றி கிடைக்காது. ஆடியன்ஸ் என்ன கதையை விரும்புகிறார்கள் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். சினிமாவில் வெற்றியை நம்மால் ஃபிக்ஸ் செய்ய முடியாது" என்று மித்ரன் குறிப்பிட்டுள்ளார்.அடுத்ததாக நாக சைதன்யாவுடன் கூட்டணி?இதற்கிடையில், 'சர்தார் 2' படத்தை முடித்த பிறகு பி.எஸ்.மித்ரன் அடுத்ததாக தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான நாக சைதன்யாவை வைத்து புதிய படம் ஒன்றை இயக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.